# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. முப்பத்துநான்கு ஆண்டுகள் வன்னியை ஆட்சி செய்த மன்னன்

அ ) பண்டாரவன்னியன் ☐ ஆ ) சேனன் ☐

இ ) கயிலைவன்னியன் ☐ ஈ ) சங்கிலியன் ☐

2. காண் என்ற வினையடியைப் பெயரெச்சமாக மாற்றினால்

அ ) கண்ட ☐ ஆ ) கண்டு ☐

இ ) கண்டான் ☐ ஈ ) கண்டனர் ☐

3. வெகுளாமை என்ற அதிகாரம் ____________ பற்றிக் கூறுகிறது.

அ ) கல்வி ☐ ஆ ) சினம் ☐

இ ) நட்பு ☐ ஈ ) ஒழுக்கம் ☐

4. நீ + உடன்

அ ) என்னுடன் ☐ ஆ ) உங்களுடன் ☐

இ ) நீயுடன் ☐ ஈ ) உன்னுடன் ☐

5. இனியன் நண்பனோடு சென்றான். இதில் இடம்பெற்ற வேற்றுமை உருபு

அ ) கு ☐ ஆ ) ஐ ☐

இ ) இல் ☐ ஈ ) ஒடு ☐

6. வீரமாமுனிவரின் இயற்பெயர்

அ ) பெச்கி ☐ ආ ) சேவியர் ☐

இ ) மயில்வாகனன் ☐ ஈ ) வரதன் ☐

7. கடுகி என்பதன் பொருள்

அ ) எழுந்து　　ஆ ) சிறுமை

இ ) விரைந்து　　ஈ ) பெருமை

8. மங்கையர் இடையில் அணியும் அணிகலன்

அ ) தண்டை　　ஆ ) மேகலை

இ ) குண்டலம்　　ஈ ) மணிமாலை

9. வெட்டுகின்றனர் இதில் இடம்பெற்றுள்ள இடைநிலை

அ ) அர்　　ஆ ) வெட்டு

இ ) னர்　　ஈ ) கின்று

10. தனித்து நின்று பொருள் தராதவை

அ ) வினைச்சொற்கள்　　ஆ ) பெயர்ச்சொற்கள்

இ ) இடைச்சொற்கள்　　ஈ ) கலைச்சொற்கள்

11. தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்

அ ) எல்லாளன்　　ஆ ) குத்திகன்

இ ) வீரபாண்டியகட்டப்பொம்மன்　　ஈ ) மாகன்

12. பாருங்கள் என்பது

அ ) முன்னிலை　　ஆ ) தன்மை

இ ) படர்க்கை　　ஈ ) ஒருமை

13. புலவன் என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ ) குறத்தி ☐ ஆ ) உழத்தி ☐

இ ) புலத்தி ☐ ஈ ) இடைச்சி ☐

14. ஆசிரியர் கவிதையின் பொருளைத் தெளிவாக விளக்கினார்.

இச்சொல்லியத்தின் பயனிலை அடைமொழி

அ ) ஆசிரியர் ☐ ஆ ) கவிதை ☐

இ ) விளக்கினார் ☐ ஈ ) தெளிவாக ☐

15. தமிழகத்தில் கல்லணையைக் கட்டுவித்த சோழ மன்னன்

அ ) இராசராசசோழன் ☐ ஆ ) கரிகாற்சோழன் ☐

இ ) இராசேந்திரசோழன் ☐ ஈ ) குலோத்துங்கசோழன் ☐

16. முத்துப் போன்ற பல் இதில் வந்துள்ள பொதுத்தன்மை

அ ) வெண்மை ☐ ஆ ) கூர்மை ☐

இ ) மென்மை ☐ ஈ ) பசுமை ☐

17. ஏரடிக்கும் சிறுகோலால் தரணி ஆள்பவர்

அ ) அரசர் ☐ ஆ ) வீரர் ☐

இ ) காராளர் ☐ ஈ ) வேந்தர் ☐

18. பதினான்கு என்பதைப் பிரித்து எழுதினால்

அ ) பத்து + னான்கு ☐ ஆ ) பதி + னான்கு ☐

இ ) பதி + நான்கு ☐ ஈ ) பத்து + நான்கு ☐

19. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) பக்கம்பக்கம் ☐ ஆ ) மேலும்கீழும் ☐

இ ) பளபள ☐ ஈ ) இரவும்பகலும் ☐

20. பூட்டிய வில்லும் குறிவைத்த அம்புமாக நின்றவன்

அ ) அயலவன் ☐ ஆ ) கத்தரிவெருளி ☐

இ ) பகைவன் ☐ ஈ ) மாற்றான் ☐

21. கமுகமரத்தில் ஏறி மழைமுகிலை ஊடுருவி மழையோடு கீழ் இறங்கியது

அ ) குரங்கு ☐ ஆ ) கஞ்சமகள் ☐

இ ) வாளைமீன் ☐ ஈ ) மேதி ☐

22. எதிர்மறைச்சொல்லியத்திற்கு எடுத்துக்காட்டு

அ ) அவன் பிறந்தநாள் விழாவில் உணவு உண்டான். ☐

ஆ ) அவன் பிறந்தநாள் விழாவில் உணவு உண்டிலன். ☐

இ ) அவன் பிறந்தநாள் விழாவில் உணவு உண்கின்றான். ☐

ஈ ) அவன் பிறந்தநாள் விழாவில் உணவு உண்பான். ☐

23. இராவணனைக் காட்டிக் கொடுத்தவன்

அ ) வீடணன் ☐ ஆ ) கும்பகர்ணன் ☐

இ ) காக்கைவன்னியன் ☐ ஈ ) கதிர்காமநாயகம் ☐

24. விருந்தோம்பல் பற்றிக் கூறும் கழக இலக்கிய நூல்

அ ) மூதுரை ☐ ஆ ) அழகின்சிரிப்பு ☐

இ ) இருண்டவீடு ☐ ஈ ) சிறுபாணாற்றுப்படை ☐

25. வினாப்பொருளை உணர்த்தும் சொல்

அ ) எவை ☐ ஆ ) இங்கு ☐

இ ) அவன் ☐ ஈ ) அந்த ☐

26. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன

அ ) நானிலங்கள் ☐ ஆ ) நாற்றிசைகள் ☐

இ ) நாற்படைகள் ☐ ஈ ) நாற்குணங்கள் ☐

27. காய்தல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

அ ) இழத்தல் ☐ ஆ ) உவத்தல் ☐

இ ) விழித்தல் ☐ ஈ ) தெளிதல் ☐

28. நாட்டுக்காப்பியம் என அழைக்கப்படுவது

அ ) மணிமேகலை ☐ ஆ ) வளையாபதி ☐

இ ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) குண்டலகேசி ☐

29. மரம் என்பது

அ ) காலப்பெயர் ☐ ஆ ) பண்புப்பெயர் ☐

இ ) சினைப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

30. இடையின எழுத்துகளில் ஒன்று

அ ) ழ் ☐ ஆ ) ன் ☐

இ ) ந் ☐ ஈ ) ற் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தென்கிழக்கு ஆசியாவில் அதிக மீன் வளம் உள்ள கடலையுடையது தமிழீழம். மன்னார், பாலைதீவு, பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் சிறந்த மீன்வளமுடையன. வடதமிழீழத்தைச் சுற்றியுள்ள பரவைக்கடல்களில் கடலட்டை, இறால் போன்றவைகள் நிறைந்துள்ளன. ஆனையிறவில் உப்பு வளம் மிகுந்து காணப்படுகின்றது. ஈழத்தின் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யக்கூடியவை எங்களது உப்பளங்கள். செல்வச்சந்நிதி கோவிலுக்கு அருகிலுள்ள கடலிலிருந்து ஆனையிறவுக்கு நீர்வழிப் போக்குவரத்து உள்ளது. அவ்வழி தொண்டமானாறு என்று அழைக்கப்படும். பண்டைக்காலத்தில் தொண்டமானாறு வழியினூடாகவே ஈழத்து உப்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

1. தென்கிழக்கு ஆசியாவில் அதிக மீன் வளம் உள்ள கடலையுடையது எது?

_______________

2. ஆனையிறவில் எது மிகுந்து காணப்படுகிறது?

_______________

3. வடதமிழீழத்தைச் சுற்றியுள்ள பரவைக்கடல்களில் எவை நிறைந்துள்ளன?

_______________

_______________

4. எவ்வழியினூடாக ஈழத்து உப்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது?

_______________

5. சிறந்த மீன்வளமுடைய இடங்கள் இரண்டு தருக.

_______________

_______________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழ்நாட்டில் பழந்தமிழிசை பற்றிய செய்திகளைக் கூறும் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களில் ஒன்றைத் தருக.

___________________________________________

2. இசைத்தூண்கள் அமைந்துள்ள ஆலயங்களில் ஒன்றைத் தருக.

___________________________________________

3. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதியின் பெயர் என்ன?

___________________________________________

4. வயலில் மிதந்த சங்குகள் யாரால், எவற்றிற்கு எறியப்பட்டன?

___________________________________________

___________________________________________

5. வெள்ளத்தைச் சினத்துக்கு உவமையாகக் கூறியவர் யார்?

___________________________________________

6. சிலப்பதிகாரத்தின் முதன்மைக் கதை மாந்தர்கள் யாவர்?

___________________________________________

7. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்தியவர் யார்?

___________________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## ஆசிரியர்

| | | | | |
|---|---|---|---|---|
| கடமை | அறிய | பகலும் | கல்வி | தூய |

அகர எழுத்தை முதலில் நமக்குச்
சொல்லித் தருபவர் - உயர்
அன்பினோடு ________________ பண்பை
அறிய வைப்பவர்!
அல்லும் ________________ நூல்கள் பயின்றே
அறிவைத் தருபவர்! - உலக
அறிஞர் வாழ்வின் மேன்மையை
________________ வைப்பவர்!
சொல்லும் செயலும் ஒன்றி இருந்தே
________________ புரிபவர்! - சற்றும்
சோர்தல் இன்றிக் ________________ புகட்டும்
புனிதக் குரு அவர்!

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆற்றங்கரையோரமாக புலவர் நண்பனோடு மெல்லமெல்ல நடக்கின்றார். காற்று விரைவாக வீசுகின்றது. மழைத்துளிகள் மெல்லச் சிந்துகின்றன. அவர் வானத்தை நிமிர்ந்து பார்க்கிறார். பறவைகள் கூட்டங்கூட்டமாக வானில் பறக்கின்றன. பாதையோரம் மலர்ந்திருந்த மலர்கள் மணம் பரப்புகின்றன. இந்த இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்தவாறு புலவர் நடந்து செல்கிறார்.

1. பன்மைச் சொல் ஒன்று தருக.

______________________________

2. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

______________________________

3. மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைத் தருக.

______________________________

4. வினையெச்சம் ஒன்று எழுதுக.

______________________________

5. மலர்கள் மணம் பரப்புகின்றன. இச்சொல்லியத்தை இறந்தகாலச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் வினைமுற்றுகளில் காலம் காட்டு இடைநிலைகளைக் கண்டு எழுதுக.**

1. விரும்பினான் ______________
2. கேட்பான் ______________
3. குரைக்கின்றது ______________

புள்ளிகள் 03

2. **பின்வரும் சொல்லியங்களில் உள்ள சுட்டுப்பொருளை உணர்த்தும் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. அரும்பாடுபட்டு உழைத்த உழவர் அப்பணத்தை ஏழைகளுக்கு வழங்கினர்.

_______________________

2. தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அங்கு ஏதிலிகளாக வாழ்கின்றனர்.

_______________________

புள்ளிகள் 02

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

வழி வலி பள்ளி பல்லி மருத்துவமனைக்கு மறுத்துவமனைக்கு

ஒருநாள் ஆதவன் _______________ செல்லும் போது சுவரில் _______________ ஒன்றைக் கண்டான். அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது நண்பன்ஆதவனை அழைத்தான். இருவரும் மிதியுந்தில் சென்றனர். செல்லும் _______________ மேடும்பள்ளமுமாக இருந்தது. ஆதவன் தடக்கிக் கீழே விழுந்தான். காலில் _______________ ஏற்பட்டது. நண்பன் அவனை அருகில் இருந்த _______________ அழைத்துச் சென்றான்.

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசிய விலங்கு உண்டு. கங்காரு அவுத்திரேலியாவின் தேசிய விலங்காகும். இது வயிற்றின் முன்புறம் உள்ள பை போன்ற உறுப்பில் தன் குட்டியைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். அவற்றைப் பார்க்க அழகாக இருக்கும்.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

- ✸ எதற்கும் முன்னேற்பாடுடன் இருத்தல் வேண்டும்.
- ✸ இருக்கிற அளவிற்குள் தான் அறிவு வெளிப்படும்.
- ✸ ஒற்றுமை நலன் விளைவிக்கும்.
- ✸ விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம்.
- ✸ அற்ப பொருளையும் இழக்காது பேண வேண்டும்.

1. மனமுண்டானால் இடமுண்டு.

______________________________

2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

______________________________

3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

______________________________

4. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.

______________________________

5. பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்.

______________________________

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ விபுலானந்த அடிகள்
- ✸ வீரம் செறிந்த வன்னி மண்ணும் தமிழரசுகளும்
- ✸ எனது தாயகம்
- ✸ நான் கண்ட கனவு

புள்ளிகள் 15